# ப்ளாக்நார்த் (BlackNorth) என்னும் புது முனைப்பு பணியில் இணைந்துகொள்ள ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாக உறுதிமொழி எடுக்கிறது; கறுப்பர் மீதான இனவெறியை ஒழிப்பதற்கான கடப்பாட்டினை வலுப்படுத்துகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 17, 2021) – ஜூன் 16 ஆம் தேதியன்று, [ப்ளாக்நார்த் புது முனைப்பு பணியில் (The BlackNorth Initiative)] இணைந்து கொள்ள ப்ராம்ப்ட்டன் நகரசபை ஒருமனதாக உறுதிமொழி எடுத்தது.

இந்த புது முனைப்புப் பணிக்காக உறுதிமொழி எடுத்து கையொப்பமிடுவதன் மூலம், கனடிய வாழ் கறுப்பர் இன மக்களின் வாழ்க்கையை எதிர்மறையாக பாதிக்கின்ற, புரையோடிப்போன தடைகளை அகற்றுவதற்காக 450 க்கும் மேற்பட்ட உலகளாவிய கறுப்பர் மீதான-இனவெறி எதிர்ப்பு அமைப்புகளுடன் ப்ராம்ப்ட்டன் நகரமும் இணைந்துகொள்கிறது.

இப்படி கூட்டு சேருவதானது, சமத்துவத்திற்கான அலுவலகத்தின் கீழாக நகரத்தின் பொருளாதார அதிகாரமளித்தலுக்கும் மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பின் பணிகளுக்கும் வலு சேர்க்கும்; மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர்வாழ் கறுப்பர் சமுதாயத்திற்காக, வல்லமை கொண்ட நிபுணர்கள் கொண்ட கூட்டமைப்பை அணுக அனுமதிக்கும்; பரந்த வலையமைப்பு வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும், போற்றிக்காக்கும் தன்மையை வழங்கும், மற்றும் கூட்டாண்மையை உருவாக்கும். மற்றும் எதிர்கால ஈடுபாடுகளுக்காக ஒத்துழைக்கும் வாய்ப்புகளையும் வழங்கும்.

நமது நகரத்தில் கறுப்பர் மீதான இனவெறிக்கு எதிரான தீர்வு காண, நகரம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. ஜூன் 10, 2020 அன்று, ஆப்பிரிக்க மற்றும் கரீபிய கறுப்பர் இனத்திற்கு சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு பிரிவை உருவாக்குவதற்கான பிரேரணைக்கு ப்ராம்ப்ட்டன் நகர சபை ஏகமனதாக ஒப்புதல் அளித்தது. உள்ளூர் சமூக வளர்ச்சியில் பங்கு வகிப்பவர்களின் வழிகாட்டுதலுடன், புரையோடிப்போன, கறுப்பர்மீதான இனவெறியை ப்ராம்ப்ட்டனில் ஒழிப்பதற்கான செயல் திட்டத்தை உருவாக்குவதும், ப்ராம்ப்ட்டனின் கறுப்பின சமூகத்தின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் இந்த அமைப்பின் நோக்கமாக உள்ளது. கடந்த ஆண்டில், கறுப்பர் இன சமூகத்துடன், சிறந்த உறவை வளர்ப்பதற்காக இந்த அமைப்பு சமூக வளர்ச்சியில் பங்கு வகிப்பவர்கள் பலரை ஈடுபடுத்தி அதற்கான நிகழ்ச்சிகளையும் நடத்தியது; மேலும் கல்வி மற்றும் அரசு நிறுவனங்கள் /அமைப்புகளுடனும் சேர்ந்து இதனை நடத்தியது.

இந்த அமைப்பு தொடர்ந்து கறுப்பின சமூகம் மற்றும் சமூக வளர்ச்சியில் பங்கு வகிப்பவர்களுடன் முக்கியமான மூலோபாயம் கொண்ட மற்றும் ஆழ்ந்த ஆலோசனைகளைக் கொண்டுள்ளது; மேலும் இது நகரத்தில் நிலவும் புரையோடிப்போன தடைகளை அகற்றி நிவர்த்தி செய்வதற்கான புது முனைப்புகளை

அடையாளம் காணும் ஒரு செயல் திட்டத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும். இந்த அமைப்பு பற்றி மேலும் அறிய வருகை தரவும்: brampton.ca/antiblackracism.

**ப்ளாக்நார்த் புது முனைப்புப் பணி (BlackNorth Initiative) பற்றி**

கறுப்பர் மீதான இனவெறிக்கு எதிரான கனேடிய வணிகத் தலைவர்கள் கொண்ட குழுவின் தலைமையில், 2020 ஆம் ஆண்டில் கனடா முழுவதும் உள்ள கார்ப்பரேட் நிறுவனங்களில் காணப்பட்ட வெளிப்படையான ஏற்றத்தாழ்வுகளுக்கு பதிலளிப்பதற்கும், கனேடிய வாழ் கறுப்பின மக்களின் வாழ்க்கையை எதிர்மறையாக பாதிக்கின்ற கறுப்பர் இன எதிர்ப்பு எனும் புரையோடிப்போன தடைகளை அகற்றுவதற்கும் இந்த ப்ளாக்நார்த் புது முனைப்பு பணி நிறுவப்பட்டது. கனடா முழுவதும் நிர்வாக சபைகள் மற்றும் செயலதிகாரிகள் மட்டத்தில் கறுப்பர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதே ப்ளாக்நார்த் புதுமுனைப்புப் பணியின் நோக்கமாகும். உறுதிமொழி கொடுப்பவர்களுக்கு கார்ப்பரேட் கனடா ஆதரவை வழங்குகிறது; அதே வேளையில், பிளாக்நார்த் புது முனைப்பு பணிகள், பல முக்கிய திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தியுள்ளது; இதில் வணிகம் செய்வதற்கான வழிகாட்டல், சொந்தவீட்டுக்கு உரிமையாளர் ஆக வைக்கும் திட்டம் மற்றும் கறுப்பின இளைஞர்களுக்கான மனநலவள திட்டம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கனடிய வாழ் கறுப்பின மக்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் அறிய வருகை தருக: blacknorth.ca.

**சமத்துவ அலுவலகம் பற்றி**

ப்ராம்ப்ட்டன் நகரம் அதன் ஊழியர்களுக்கும் குடிமக்களுக்கும் சேவை செய்வதற்காக, கவுன்சிலின் ஆயுட்கால முன்னுரிமை கொண்ட விஷயமாகிய 'ப்ராம்ப்ட்டன் ஒரு மொசைக் நகரமாக' ஆக்கும் பணியின் ஒரு அங்கமாக, சமத்துவ அலுவலகத்திற்கான அடித்தளத்தை அமைக்கிறது. பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்புக்கு என அமைக்கப்பட்ட ஈக்விட்டி அலுவலகம், அனைத்து தனிநபர்களையும் நியாயமாகவும் மற்றும் சரிசமமாகவும் நடத்துவதை உறுதி செய்வதற்கும், நகரத்திற்குள்ளும் மற்றும் அதன் குடியிருப்பாளர்களுக்கு இடையேயும் இணக்கமான சூழலை மேம்படுத்துவதற்கும் செயல்படும். நவம்பர் 2019 இல், பிராம்ப்டன் நகரம் பணியிட பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்சேர்க்கும் உத்தி மற்றும் அதற்கான ஒரு புதிய ஐந்தாண்டு பணித் திட்டத்தை அறிமுகப்படுத்தியது; இது தனது மக்களை ஈடுபடுத்தி, அபிவிருத்தி செய்து கொண்டாடுகின்றது, மற்றும் பலதரப்பட்ட பணியாளர்களை ஈர்க்கின்ற வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நிறுவன கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை அமைத்துக் கொடுக்கிறது.

**அறிஞர் கூற்றுக்கள்**

"இந்த உறுதிமொழியானது நமது நகரத்தில் புரையோடிப்போன இனவெறியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ப்ராம்ப்ட்டன் நகரத்தின் உறுதிப்பாட்டுக்கு மீண்டும் வலு சேர்க்கிறது. நமது பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பின் முக்கிய

வேலைகளில் உடன்  இணைந்து செயல்படுவது மற்றும் கட்டமைப்பதன் மூலம் , நாம் ஒரு பரந்த கண்ணோட்டத்தைக் பெறுவோம்; கறுப்பின சமூகத்தினரிடையே ஈடுபாடு கொண்டு அவர்கள் சொல்வதை உற்றுக்கேட்டு அறிந்துகொண்டு, தாக்கம் நிறைந்த மாற்றங்களைச் செய்து, நமது நகரில் இருக்கும் புரையோடிப்போன தடைகளை அகற்ற இந்தக் கண்ணோட்டம் உதவும். "

- பேட்ரிக் பிரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்"

கடந்த ஆண்டில், நகரத்தின் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பு  தனக்கான அடித்தளத்தை அமைத்துள்ளது, இப்போது ஒரு ஆழமான சமூக ஆலோசனை செயல்முறையை நோக்கி செயல்பட்டு வருகிறது;  நகரம் முழுவதிலுமாக பன்முகத்தன்மையை பதிக்க ஒரு முழுமையான ஐந்தாண்டு செயல் திட்டத்தை உருவாக்க இது உதவும்.  தி ப்ளாக்நார்த் (BlackNorth ) புது முனைப்புப் பணி போன்ற வெளிப்புற அமைப்புகளுடன் பணிபுரிவது மற்றும் சமூக கூட்டாண்மைகளை கட்டமைப்பது  என்பது இந்த திட்டத்தை உருவாக்க முக்கிய பங்காற்றும் ; மேலும் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு நிபுணர்களின் கூட்டமைப்பைச்  சார்ந்து இருக்கும். "

- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்."

"ப்ளாக்நார்த் புது முனைப்புப் பணியானது, ஒரு பெரிய வெற்றிடத்தை, அதாவது கார்ப்பரேட் கனடாவில் உள்ள கறுப்பர் இனத்திற்கு சொந்தமான வணிகங்கள் மற்றும் நிபுணர்களுக்கான ஆதரவு இல்லாமையைக் கண்டறிந்து  நிரப்புகிறது. நாடு முழுவதிலும் உள்ள இனரீதியாக ஒதுக்கப்பட்ட சமூகங்கள் மீது புரையோடிப்போன தடைகளை அகற்றுவதில் பெருநிறுவனங்களுக்கும் செல்வாக்கான மனிதர்களுக்கும் ஒரு சமூக பொறுப்புணர்வை ஏற்கவைக்க இது ஒரு வாய்ப்பாகும். கறுப்பின மக்களின் திறமைகள், வணிகங்கள், இளைஞர்கள் மற்றும் அந்த சமூகத்தின் வெற்றி மற்றும் ஈடுபாட்டிற்கான அவர்களின் வாதம் பாராட்டத்தக்கது. இது ஒரு முன்னெப்போதுமில்லாத முயற்சியாகும் மற்றும், வரவிருக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து நான் மிகவும் பரவசமடைகிறேன். "

*- கின்னெத் சாப்மேன், மூத்த ஆலோசகர், பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு  அமைப்பு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

ப்ளாக்நார்த் பூர்வாங்கப் பணியில் இணைந்துகொண்ட இரண்டாவது நகராட்சியாக இருக்கும் ப்ராம்ப்ட்டன் நகரத்தை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம்; புரையோடிப்போன கறுப்பர் மீதான இனவெறி மற்றும் அதன் சமூகத்தில் உள்ள கறுப்பினத்தினருக்கு அது ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கங்களுக்கு தீர்வு காண்பதாக உறுதி எடுத்திருக்கிறோம். தீர்க்கமான முடிவு எடுப்பதன் மூலம் ப்ராம்ப்ட்டனின் கறுப்பர் இன சமூகத்திற்கு அதிகாரம் வழங்கி உயர்த்துவதற்கு உறுதியளித்த  மேயர் பேட்ரிக் ப்ரவுன் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர கவுன்சிலர்களுக்கு நன்றி கூறுகிறோம். நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம் "

- வெஸ் ஹால், நிறுவனர், தி பிளாக்நார்த் பூர்வாங்கப் பணி

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca